[1978 மார்ச் 9

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியத்திலுள்ள அந்த மாவுத்தம்பதி என்ற இடத்தில் வாலையாற்றுப் பக்கத்தில் மலையடிவாரத்தில் இருளர் என்ற மலை சாதியினருக்கு ஃபாரஸ்ட் நிலத்தில் கட்டிய வீடுகளை ஃபாரஸ்ட் அதிகாரிகள் கொளுத்தி அவர்களுக்கு வீடு இல்லாமல் செய்திருக்கிருர்கள். அந்த இடத்தில் வீடு கட்டிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? வீடு கட்டும் திட்டமே இல்லையென்று சொன்னல் அவர்கள் இருக்க முடியாமற் போய்விடும். எனவே இதுபற்றி மறு பரிசீலனை செய்யப்படுமா? அவர்கள் ஊருக்குச் செல்ல ரோடு போடப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, காட்டிலாக்கா நிலத்தை ஒதுக்கித் தருவது என்பது மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் செய்ய வேண்டியது. வேறு பகுதியில் நிலம் இருந்தால் அதை இந்தத் துறை பொறுப்பேற்று அவர்களுக்கு வீட்டு மனை வழங்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாதை வசதி தேவைப்பட்டால் அதையும் பரிசீலிக்கிறேன்.

தனியார் போக்குவரத்து நிறுவனத்தின் தொழிலாளர்கள்.

*477 வினு—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு, தனியார் பேருந்துகளை ஏற்றுக் கொண்டாலும் அல்லது அவர்கள் வழித் தடங்களை சரண்டர் செய்தாலும், பாதிக்கப்படும் தொழிலாளர்களை அரசு நிறுவனங்களில் பணி புரிய ஏற்றுக் கொள்ளும் திட்டம் உண்டா?

(ஆ) திருநெல்வேலி ஸ்ரீராம் பாப்புலர் பஸ் நிறுவனத்தில் பணியாற்றிய 104 தொழிலாளர்கள் அரசு நிறுவனங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) தனியார் தாங்களாகவே போக்குவரத்து உரிமங்களை ஒப்படைக்க முன் வந்து அதைப் போக்குவரத்துக் கழகங்கள் ஏற்றுக் கொண்டால் பாதிக்கப்படும் தொழிலாளர்களை மேற்படி கழகங்கள் பணியில் அமர்த்திக் கொள்ள முன் வரும்.

ஆனல் தனியார் பொருளாதார அடிப்படையில் பேருந்துகளை நிறுத்தி அவற்றின் உரிமங்களை மாவட்டப் போக்குவரத்து ஆணையரிடம் ஒப்படைத்துவிட்டால், அப் பேருந்துகளில் பணியாற்றிய தொழிலாளர்களை நேரடியாக எடுத்துக் கொள்ள இயலாது.

(ஆ) இல்லை.

1978 மார்ச் 9]

(முற்பகல் 10–10)

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஸ்ரீராம் பாப்புலர் பஸ் கம்பெனியில் பணி புரிந்த 104 தொழிலாளர்கள், அந்த பஸ் கம்பெனி 11 வழித் தடங்களை சரணடர் செய்த காரணத்தினுல், இன்றைக்குத் தெருவிலே நிற்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது பற்றி அமைச்சருக்குப் பலமுறை முறையீடுகள் செய்த பொழுது பரிசீலிக்கப்படும் என்ற விடையைச் சொன்னுர்கள். ஆனுல், இப்பொழுது வேறு மாதிரி பதில் சொல்கிருர்கள். ஆகவே, இந்த வழித் தடங்களை அரசு எடுக்கும்போது, அந்தத் தனியார் பஸ்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களை எடுத்துக் கொள்வதில் அரசினுடைய கொள்கைதான் என்ன என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகன சட்டம், சாப்டர் 4, மற்றும் 4-ஏ-ன் கீழ் தனியார் பேருந்துகளை நாட்டுடைமையாக்குகிற பொழுது, அதனுல் வேலை இழக்கின்ற பணியாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற விதியின் அடிப்படையில் பரிசீலனை செய்து வருகிருேம்—நடைமுறைப் படுத்தி வருகிருேம். ஆனுல் ஸ்ரீராம் கம்பெனியைப் பொறுத்த வரையில், 10 உரிமங்களுக்கு மேல் வைத்திருக்கிற தனியார் பேருந்துகளை அவர்கள் ஒப்படைத்து விட வேண்டுமென்ற நடைமுறையை எதிர்த்து, உயர் நீதி மன்றத்திலே வழக்கு தொடர்ந்திருக்கிற காரணத்தால், அந்த வழக்கு முற்றுப் பெருத காரணத்தால், அந்தப் பணியாளர்களுக்கு வேலை கிடைக்க வழியில்லாமலிருக்கிறது. 35 உரிமங்களில், 11 உரிமங்களை அவர்கள் தாங்களாகவே நிறுத்தி விட்டார்கள். அந்த உரிமங்களின் பேருந்துகளை அவர்கள், அரசிடம் ஒப்படைக்கவில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடுவன்குடி அருகிலுள்ள மதகினை சீர் செய்தல்.

*478 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம், பட்டவர்த்தி பஞ்சாயத்தில், கடுவங்குடி பகுதி அரசலாறு நெடுஞ்சாலையிலுள்ள மதகினை சீர் செய்யும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இப்பாலத்திற்கு மேம்பாடு எதுவும் தேவையில்லை. இப்பாலத்தின் அணுகு சாலை ரூ. 10,500 செலவில் அண்மையில் மேம்பாடு செய்யப்பட்டது.